# புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ்

பதிப்பு

கி. வெங்கடேஷ்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# புதுவை அருணாசலம்

# பிள்ளைத்தமிழ்

*“சுவடியியலும் பதிப்பியலும்” பட்டயப் பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்படும் பதிப்பேடு*


பதிப்பாளர்

**கி. வெங்கடேஷ்**

நெறியாளர்
முனைவர் வீ. அரசு
தமிழ்த் துறைத்தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்லைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**ஆகஸ்ட் - 2007**

"சுவடியலும் பதிப்பியலும்"

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் ஆய்வேடு

எண்: 53010633

# உள்ளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 1–7 |
| செய்யுள் | 8–64 |
| முடிவுரை | 65 |
| துணை நூற்பட்டியல் | 66 |

# பதிப்பாளர் உறுதிமொழி

**கி. வெங்கடேஷ்**
புதுக்கல்லூரி
இராயப்பேட்டை
சென்னை .

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் **'புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ்'** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

**(கி. வெங்கடேஷ்)**

நாள்:
இடம்: சென்னை-5

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு**
தமிழ்த் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காக **'புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ்'** என்னும் தலைப்பிலான சுவடியை **கி. வெங்கடேஷ்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(வீ.அரசு)**

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழக சுவடியியல் பட்டய வகுப்பில் சேர வாய்ப்பளித்து சுவடியியல் பட்டய பயிற்சி வகுப்பில் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடி எம்முறையில் படித்து யாப்பு பிரித்து பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்தும், இவ்வகுப்பு தொடர்பாக நூலைப் பதிப்பித்தால் ஏற்படும் பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்தும், இவ்வகுப்பு தொடர்பாக நூலைப் பதிப்பிக்க ஊக்கமளித்தும் வழிகாட்டிய நெறியாளர் **முனைவர் வீ.அரசு** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்ட ஆய்வேட்டிற்காகச் சுவடி அளித்து உதவிய சென்னைப்

பல்கலைக்கழக கீழ்த்திசை சுவடி நூலகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலினை செம்மையாக பதிப்பிக்க உதவிய என் தோழர் செந்தில்ராஜா மற்றும் குமரவேல் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை சிறப்பான முறையில் தட்டச்சு செய்ய உதவி புரிந்த **டுடேகிராபிக்ஸ்** நிறுவனத்திற்கும் என் நன்றி.

**கி. வெங்கடேஷ்**

# முன்னுரை

நாயக்கர் ஆட்சிக்காலத்தினை சிற்றிலக்கிய காலம் என்றே குறிப்பிடுவது மிகப்பொருத்தமாகும்.

பிரபந்தம் எனப்படுவது நன்கு கட்டப்பட்டது எனப் பொருள்படும். வடமொழிச் சொல்லான பிரபந்தம் எனப்படுவது தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றழைக்கப்படுகிறது. பிரபந்தங்கள் 96 வகை என்பர். இதனை விளக்க வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் பிரபந்தம் 96 வகை எனக்குறிப்பிடுகிறார். இப்பிரபந்தங்களைப் பற்றி வச்சணந்திமாலை, சிதம்பரப்பாட்டியல், போன்ற நூல்கள் இவற்றைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

**தொல்காப்பிய கூறுகள் :**

"குழவி மருங்கினும் கிழவதாகும்" எனும் தொல்காப்பிய நூற்பா பிள்ளைத்தமிழுக்கான தோற்றத்தினைக் குறிக்கின்றது.

"ஊரொடு தோற்றமும் உரித்தெனமொழிப" எனும் நூற்பா தொல்காப்பியர் காலத்திலேயே பிள்ளைத்தமிழ் நூல்கள் இருந்தன என்பதை உணர்த்துகின்றன.

**பக்தி இலக்கியத்தில் பிள்ளைத்தமிழ்:**

ஆழ்வார்களுள் தலையாயவராக கருதப்படும் பெரியாழ்வார் அவர்கள் கண்ணனை குழந்தையாக பாவித்து பாடியுள்ளார். இதனை பிள்ளைத் தமிழுக்கு உரிய அடிப்படையாகவும் பிள்ளைத்தமிழின் தோற்றமெனவும் கொள்ளத்தக்கதாகவும் அமைந்துள்ளது.

**பிள்ளைத்தமிழ் இலக்கணம் :**

இறைவனையோ அல்லது அரசனையோ, வள்ளலையோ குழந்தையாக பாவித்து பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்படும் இது குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை ஒரு பருவத்திற்கு இரண்டு திங்கள் எனவகுத்துக்கொண்டு பத்துப்பருவங்களில் பாடப்படுவது. இதனை,

பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்

மூன்றுமுதலா முவேழ் அளவும்

ஆன்ற திங்களின் அறைகுவற் றிலையே (பன்னிருபாட்டியல்)

ஒரு பருவத்திற்கு பத்துப் பாடல்கள் வீதம் பத்து பருவத்திற்கு 100 பாடல்கள் பாடப்படுவதாகும்.

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய இலக்கணமாக,

சாற்றரிய காப்புதால் செங்கீரை சப்பாணி

மாற்றரிய முத்தமே வாரானை – போற்றிய

அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே

பம்புசிறு தேரொடு பத்து

பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குறிய இலக்கணம்

பின்னைய மூன்றும் பேதையர்க்காக

ஆகும் கழங்கம் மானை ஊசல்

பாடுங்கவியால் வகுத்து வகுப்புடன்

அகவல் விருத்தத் தாற்கினையானவாம்

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரானை, அப்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும், இப்பத்துப்பருவங்கள் முதல் ஏழும் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாதாகக் கடைசி மூன்று பருவங்களான சிறுபை, சிற்றில், சிறுதேர் என்பவற்றிற்கு பதிலாக கழங்கு, அம்மானை, ஊசல் என பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு கூறுவது மரபாகும்.

இதன்படி நாள் எடுத்துக் கொண்ட புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழின் சிறப்பினை காணலாம்.

**பாடலின் சிறப்புகள்**

புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழின் பாடல்களின் சிறப்பினை,

"புதுவை அருணாசல மடாதிபதியே வாழ்க" என்று கூறப்படுவதிலிருந்து மடத்தின் தலைவராகவும் இருந்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இந்நூலாசிரியர் பற்றியும், நூலினைப்பற்றியும் சுவடியில் எந்தக்குறிப்பும் காணப்படவில்லை. இப்பாடல் முழுவதும் "எண்சீர் விருத்தம்" என்னும் யாப்பு வடிவில் அமைந்துள்ளது. மேலும் சிவபெருமானையும் முருகபெருமானையும் போற்றி பாடுகின்றார்.

சிற்றில் 1 ஆம் பாடலில் கங்கை, யமுனை, கோதாவரி, காவிரி, வைகை, பெண்ணை போன்ற ஆறுகளைப் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் சிறப்புக்குரியனவையாக அமைந்துள்ளது. மேலும்,

"மனுநீதி சோழனை"ப்பற்றி செய்திகளும், "பாரியை"ப் பற்றிய செய்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தமிழைப் பற்றிய அடைமொழிக் கூறுகள் :**

தமிழைச் சிறப்பித்துக் கூறுவதில் இந்நூலும் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

தமிழினை – "முத்தமிழ்க் கவி"

"விசைத்தமிழ்"

"தண்டமிழ்" என்ற சொற்றொடர்களால் தமிழ் சிறப்பிக்கப்படுகிறது.

**சிதைத்து போன பாடல்கள்:**

சுவடிகளில் முன்னும் பின்னும் சிதைந்து காணப்படு இயல்பு ஆனால் இச்சுவடி இடைப்பகுதியில் சிதைந்து போய் காணப்படுகிறது. அவை,

காப்பு பருவத்தில் – 1, 2, 3, 4 ஆகிய நான்கு பாடல்களும் சிதைவுற்றும்,

சிற்றில் பருவத்தில் – 6 ம் பாடல் அதிக அளவில் சிதைவுற்றும் காணப்படுகிறது.

**தளைதட்டுதல்**

இப்பிள்ளைத்தமிழின் காப்பு பருவத்தில் 15 ஆம் பாடலும்

சப்பாணிப் பருவத்தில் 4 ஆம் பாடலும் தளை ஒன்றிவரவில்லை.

பருவங்கள் அமைப்பு முறை

பிள்ளைத்தமிழ் அமைப்பு முறையில்

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாரனை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், என்ற அமைப்பு முறையில் உள்ளது ஆனால் புதுவை அருணாசலம் பிள்ளைத் தமிழில் அமைப்பு முறை மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை , சிறுதேர்,

தாலப்பருவம் மூன்றாம் பருவமாகவும், சிற்றில் எட்டாம் பருவமாகவும் இடம்மாறியுள்ளது.

தாலப் பருவம் என்பது "தாலம்" என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

# 1. காப்பு

1. பூமேவு தவளநிறமாங் குயில் விரும்பிய யாழ்
புனிதன் சிறக்கவுந்தி
பூத்தோனை வாலிபங்காத்தோளை ஒப்பில்மணி
பூண்ட முகிலைத்
தேமேவுபச்சைச் செழுந்துள மார்பனைத்
திருமங்கை
மணவாளனைத்
தென் குருகைநகராதி நாதனைப் போற்றியே
திருவடிவணங்குவனியான்
பாமேவு செந்தமிழ்ப் புதுவைநகராதி பதிபாக்கிய
நிறையோகசாலி
பாராசர்மெயத்தசரவண ---- வர்பாலனனு
கூலலோலன்
நாமேவு கலைவாணி யருள்பெருக வளருமரு
அருணாசல நரேந்திரன்
மீதில்
நவரசந்தருமினிய தமிழ்ப்பாடல் நாள நாளும்
பாடவே

2. உக்கிர நரசிங் கவடிவாகமதலைத் தலையுதித்த
கருமணிவண்ணனையும்
பாக---- தி பரமபரதநாதனை விண்ணோர்க்கு
முதலளித்தமாலை
விக்கரம சொரூபனைப் பகற்கதிர் மனத்துடன்
வெளிவிட சூத்திர
தாரனாம்.
விமலனை--- பரையாழி நீர்வண்ணனை
வியந்தனு தினந்துதயாம்
சக்கிரகாதல் சுமுகனிரவலர்கள் கலிகோபாதால்
கணித் குணாவ
சாசநய --- வன்முத்துபூபன் அருள்தினம்
புத்திரன் மேன்மையா
முக்கியவதனாம் புயவசீகரமடந்தையர்யோர்க்கு
மதனராசன்
முப்புவியேதிகழும் அருணாசலாதிபதி
முத்தமிழ்க்கவி தழையவே.

3. கயிலைப்பனிவரை உரைத்தபாவா

கங்கைகளவுவந்த பிரான்

கலைமான் மழுவிலைவேல் -----------

தலவித்தரான

மயிலைக்கடவுள் குருகேசிகனை வணங்கிய

நம்பரமன்

வான்பிறை சூடுந்தாண்டவராயன் மலர்த்துணை

பொற்

கயிலைப்பணிமொழி கொண்டேன்

வென்றிசைகூறுஞ்

சிறுமடவார்

கோமான்பூமானினைப் பிரியாத அருள்கூறுஞ்

சேகராசன்

வெயிலையுடையான் ------------

மேன்மையில்

நன்சூடையான்

வேளருணாசலப் பூபன்மகிழ்ந்த விசைத்தமிழ்

நன்துறவே.

4. கற்பகச் சோலையுஞ் சாலையும் சூழ்ந்து -------

---

திரிசூலி பழநீலி முக்கட்காக பாலிபாலன்

பொற்பில் குவடி

வேல்விடுத்தஅசுரகிளையெல்லாம்

பூர்ணோதய

சொரூப ஆனந்த முருகனின் பொற்பாதம்

வாழ்த்துவன்யான்

சற்புருஷமகமேரு நிகர்சொல் அபிமானவுத்

தண்டபிரசன்

சென்ருடன் சடிரியுத்தமதன்தான் சவுலப்பிய

தியாகவாரி

உற்பன்மீதுத் தவறிவாகா தயாபரன் உற்றதாங்க

மூவோ

சந்திரன் அருணாசலேந்திரன் உற்ற பிள்ளைத்

தமிட்கே.

5. புகரற்றச்சினந் தோகை மயில் வெற்றிவம்பரவி
வேற்குமரனைப்
புகர ------ செவிக்கவ்வ மதப்போர்
வாரணத்துனைக்கன்
மட்டுயர் கோபுரத்திரு மருங்கும் ஒளிக்கதிர்
மதிமருண்டுலா
இக்காதல்கூர் செர்திவம்பதிவந்த கந்தனையுகந்து
யாஞ்சிந்தனை செய்வாம்.
நிகரற்ற விதரப்பிரசங்கக்கடற் புலவர்நெறி குணங்
குலமுணர்ந்து
நேரறிந்துவிசாரித்து புகார்சிறகார் இது
துயவளிச்சூழ வள்ளலது
காக்சூழ்பேனா மதனருணாசலதயாபரன்
வாசுபுத்திரன் சாச்சாவண
முத்தூர் செந்திரன் மதலைபெறும் தண்டமிழ்த்
தழைபதற்கே

6. மருப்பைத் தனித் தென்தோன்டித்தூசி
வடிவத்தினக்கிகாத்
தெடுத்துமா பாரத
மாங்கதைப்பொருளின் பொருளின் பகுப்புத்
தொகுத்துவிரித் –
தொளிர்பொற்
பொருப்பைப்பணித்துத் திருத்தியதிற்
பொறித்ததிறக்க
மத்தத்துனை
புழைக்கானத்து திக்கைக் களிற்றையும்
அம்பொடுசிந்தித்துக் –
தொழுதெழுவாம்.
தருப்பைச் சயினத்தெழு நாள்மெய்த்த
தடங்கானவரை
வான்போன்று
அங்காத்தாம் ஒத்தரன்ன மருகன் மலர்ச்சரண்
மறவாது பெற்றான்
கரும்பைத்தரித்தாட்டிய சாற்றைக்கலந்த
சுவைப்பான்
மொழிவிளம்புங்
கருணை அருணாசலம்பிள்ளைக் கவியைப்
படித்து தீர்பபதற்கே

7. கற்றசொற்பாவலர் தம்பிரானைஎம்பிரான் காரியார்
அரசுப்புத்திரனாக்க
நெடுமுகட கடுமென்ஓங்கிய திருப்புளிக்
காவணத்தில் கதிரோன்
குற்றமற்றுஉலககெங்கும் ஞானப்பிரகாசம்
கொழுந்துவிட்டுப்
பரந்தகுருகை
நம்மாழ்வார்பாதம் புயமலர்த்தூவி
உனைகுறிக்கொண்டு
தொண்டுபுரிவாம்.
பற்றுமவற்றிடமிருந்து காரப்பரப்பதற்றும் திறத்தாற்
பாற்கதிர்
சிறந்தவாண்முக சுந்தரரோதையன் பாக்கிய
சிராக்கிய நிபுணன்
உற்றவர்கதித் தியாகத்தான பாரியன்புள்ள
வருணாசலேந்திரன்
உகந்தகமகிழ்ந்த பிள்ளைக்கவிப் பாடல்
உலகமெங்கும் பெருகவே

8. அரவணையிற்றுயில் மரகதமணி வண்ணனின்
இவ்வுகத்தியம்பும்
புயமலர்மேல் ஒன்றிய நான்முகன்பட வசுக்கள்
விசும்
பிரவியெனப்பகற்போற் பன்னருவரன்றிப்
படர்நிலவாலி மகானென்ற
விளங்கும் கலைமதியெழக் கன்னியர் மாதர்
பரவத்தருமருள் பெற்றவர் எழுவர்கள் பண்புறு
புதிர்தேவர்
பழைய மருத்துவரது முடிருநாதர்
பாதம்வணங்குதும் யாம்
குரவர்க்கடிமைத்திறமே புரியுங்குவளைப்
புயசயிலன்
கொங்கையாசன்
சரசத்துரை சரவணமுத்து உளமகிழ்ந்து
அறிவாளன்
அருணாசலதண்டமிழ்ப்பண்புறவே
காப்பு முற்றும்

# 2. செங்கீரை

1. பார்பூத்தபூம்பொழுது படகவிதைகிழிந்து
நறையாய் கமல
மண்டபத்தில்
பரிவுறும்பேயினங் சூடிகொண்டதை ஒப்பவிரிபதம்
மானம் சிறந்து
நேர்பூத்தகருணை விரிமழைமாரி
சொரிவதன்நிருபன்
அடலாழியோவிபோல
நிகழ்காலமண முரசு செய்முரசு நிறைதிருமணி
முன்றிவான்
வார்புத்த கதம்பமாமிது கமதபயோதாம்
இன்னோர்குவால்
சீவகனான
கோலாகலப்பிறவுமதி மந்திரியிருந்திரதருவாய்
வளமைபெறுதருவை
நகர்வந்தவதரித்தோன்
சீர்பூத்தகலவி கவிதைப் பொருள் விளக்கு நீ
செங்கீரை ஆடியருளே
செவ்வமுகிலெங்கள் அருணாசல நராதிபதி
செங்கீரை ஆடியருளே

2. முக்கட்பார்பான் செஞ்சடைக்கடவும் உதிரினம்
பிறையறுசூழ்
தேன்மதுமொய்த்த
சிறுதும்பை உனக்கு மணிகொக்கிற்
உற்றுமொருமித்தோன்
புக்கத்தினங்கு பொதியரசவந்துற்வப்
பைந்தொடியுவந்த
எம்மான்
பளபளென நிற்றொளிபழுக்க மழுவாளி யுற்பன
மிக்கத்துவதிற்காக பிரணவப்பொருள்வினவ
உண்மைமொழிகளிவுதா
இனிதுரைத்த
கந்தனைப்பரிமள சுகந்தனைச் சிந்தனைசெய்
கற்பக ஆடவி ஒத்தநீ
செக்கச்சிவந்தமுர்தம் ஒக்கச்சுரந்தொழுது
செங்கீரையாடி அருளே
தென்புதுவை வாழும் அருணாசல நராதிபதிசெய்
கீரையாடியருளே

3. வண்டினமணு காமக்கனி வாயிதலில் முன்

காசலம் வாருதிவற்று

தியாவமுதற்கனி ரசமின்சுடர்வீசிய

வான்மதியுடைய பிரான்

உண்டிலையென்று உரையாதபொன் உத்திக்கட

எப்படிலவிய

வாரணவாம் பரியுள்ளம் உணர்ந்தறியாக நளன்

மிண்டியகண்டிகான் தொண்டனிடப்

பணிவடையுதவிய சோமன்

பெலாவலை

தாணிநடுபுரத்து உயர்விற்கு ஈமார் மடுத்து

தேண்டிரை துன்றிய புதுவைப்பதியாய் செங்கோ

செங்கீரை

திருவருள்பெறும் அருணாசல முகிலே செங்கே

செங்கீரை.

4. காமறுதரு காவடுவிழி கலக்கவலக்கண்
உறங்காதகர் பாதகர்
இறுமாந்திழி தொழிலகற்றும் தொன்மகத்தர்
பூமானொடுமெழில்
மாமன்னன் காப்பூதாமுடர்தமைப் பூசம்பல
மகராசனெனச் கவிபுகலாதவனை தொழும்
கோமானிவனென வலியோடொழியோர்
கூறும்கொடை நிபுணா
கொங்கர் தெலுங்கர் கலிங்கர்வணங்கிய
கொற்றவர்மகிழரசே
தேமாங்கனி கதலிக்கணி மொழியாய்
செங்கோ செங்கீரை
திருவருள்பெறும் அருணாசல முகிலசெங்கோ
செங்கீரை.

5. தடமொய்த்த நாண்மலர்விகற்பத்து வரவுபெற்று
காமரைத்தோற்ற என்ன
சந்தணதொழுதி நாப்பன் புதியகற்பகத்தரு
உயர்ந்தொளிர்வதெனச்
சுடர்வச்சிரமணிதுற்று மகுடத்தில்
உச்சியிலத்தொன்று
மாணிக்கமென்னச்
சுரி முகச்சங்கக்சூழாத் திடைவலம்புரிந் துலங்கிய
சீற்றம் என்னப்
படகுநீருண்ட நெடுவிண்ணில்
நடசெத்திரப்பத்தியில்
சந்திரனெனப்
பகிரதிகுலத்து வேளாண்மார்பில்வந்து
உற்பவத்திசைநடத்தி
மருளாத்
திடபுத்திசாலி சரவணமுத்து பாலனீசங்கு
கீரையாடிய அருளே
சீர்பெரும் இன்சொல் அருணாசலமகீபனே
செங்கீரையாடியருளே

செங்கீரை முற்றும்

# 3. தாலம்

1. கருவைப்புனிதப் புனலிற்செலவிடு கற்பனையைத்
தெளியார்
காதலியுடன் மணவாளன் முயங்கிய
கட்டிளைக்குறியார்
உருவைப் பருவத்தோடு பரிபாலன்முற்ற
சமத்துணரார்
உச்சித மாயைமயக்கிய கருமத்துறைகாரணை
நினையார்
குருவைப்பணியத் துணிவற்று இருவினைகூடா
நெறிபிறவார்
குவளைவாழ்கையிது என்றுசினந்து குழைந்தழல்
தவிரசெழுந்
தருவைப்பாவை பாடியது இவைப்பதியாய்
தாலோதாலோ
தருமத்துரை அருணாசல மகிபாதாலோ தாலே
லோ

2. சுந்தரமின் படர்சந்திரவனத்து துணைவிழி

மையெழுதித்

துகளறுபிறை

நிகர்வானுதல் நடுவிற் சோபிதபாடல் மாஞ்

சிந்துர முகத்தூரியும் இருவகை திகழ்திலதுமணிந்

இந்திரல் போலிசையும் புருவத்திற்பொலி

சாந்தெழுதி

மந்தரகுண்டிய முன்கையயில் பாய்ந்த

சுடர்மணிக்கொடியும்

மாணிக்கப் பொற்கடகமுமிட்டு நல்மணிவடமசைய

மகாதந்திர

மந்திர துங்கவசீரா தாலோதாலோலோ

தருமத்துரை அருணாசல மகீபாதாலோ தாலேலோ

3. வண்டிசைபாடித் திரழ்முகை இதழலர்மட்டு நிறைந்து
நறாவழியும்
தருணத்து தரநிறைந்து மருண்டு உருண்டுதைந்
தெண்டிசைபடரும் பரிமளம் விறையுடன் ஏற்றுறை
சுண்ணமழைந்
திரவுபகற் சூழல் செங்கழநீர் மாளிகை
துவள் மணிமார்பா
பெண்டிரை மோதிய தன் ஆரம்பமெனப்
புகழ்சன்னிதியில்
விண்ணவர் தொழுவடி வேலவரின் அருள்மீதிய
சுமுகனெனத்
தண்டிகை மன்னவர் மெச்சிய மதகுஞ்சாமே
தாலோதாலேலோ
தருமத் துரையருணாசல மகிபாதாலோ
தாலேலோ.

4. பாசத்துருவைத் திரணத்தருவாய்ப் பண்ணி

செய்விசையா

பணிமிக்துருவை கனகாசலனே நேர்பாவித்து

அருள்வலவா

அரசர்க்காசி வானென்று உலகத்தவர்

புகழ்கண்யோகா

அற்புத மாதவர் செப்பிய சொற்படியப்படி

யாமதுலா

புரசைக்களிறுஞ்சாமன் கமனப்பாவியும்

இருநிதியும் பொற்பணியுஞ்

நிறைவாங்கிய வேந்தர் புரந்தருள் பொழிமுகிலே

சாசத்துரையே புதுவைக்கா சேதாலோ தாலேலோ

தயவுசெய்து அருணாசல மகிபாலா

தாலோதாலேலோ.

5. எந்ததிசையினும் இன்னானிவன் என்றேபெயர்
பெற்றய்
எக்காலமும் மனசத்திரசலை இயற்றிப்
கதியேறருய
சொந்தத்துழவதில் வருகொழுமதிச் சோம்பல்பல
சேர்த்தாய்
துயர்மதத்தை அடக்கி கருணைசுந்தர
வலர்கவிநோய்
சிந்தந்தருமதுறை பிசகாமலச் செல்வத்துள்
பார்த்தாய்
தேனும் பாலும் கண்டும் பசும்சீனியு மொத்த ருசி
சந்தத்தமிழ் பழகுஞ் சூளாமணியே
தாலோதாலேலோ
தளபதி நகிரருணாசல மகிபதி தாலோதாலேலோ.

தாலம் முற்றும்

# 4. சப்பாணி

பளபளெனமாணிக்க வெயில்விரித்திலது
பொற்படம் இருநெற்றி
நடுவில்
பத்தியிடுமாதர் சுட்டியசைந்து உதயபானு
நிகரறுகுமென்னக்
களபணிமார்பில் வயிடூரிய பொற்பணிகலந்து
வெண்டானமாலை
கழபொற்றொளி வச்சிரமணிமாலை மரகதமணி
நிறைந்தமாலை
துளவமால்கவுத்துவமணிக் கனகமாலை
யிவைதன்னியே
பின்னலாடத்
துடியிடைப் பிடிநடைச் செம்பவளவாய்ப்
பசுந்தோகையர்கள்
கண்டுவயர்
தளளெனவளையின் ஒலிகலகலென
நாதமிகுசப்பாணி
கொடியருளே
தருமநெறிபழகும் அருணாசல மகீபனேசப்பாணி
கொட்டியருளே

2. மறுவகலை முழுமதிமுகம் பெயர்வொழுகவில

மத்தகமுற்பணிய வட

மலைநிகரிரு புயமலை விற்றொளில்

மல்தொழிலளத்தெறச்

சிறுவரைபல்கவர் மலரினை செக்க நிறப்பான்மை

திகழ்ந்து

ஆயிருபுடை வியரது குழைவிசித்திர மலர்த்தாரி

விறுகியபரிபுர வொலியரை

வடமணியெழுமொழிபல

எண்டிசையுங்முற

விதனிடை முதுகு நெகிழ்ந்துநிமிர்ந்து

முனிட்டுமலர்ந்

திகழ்வாய்க்

குறு முறுவில்லின் நிலவதிலிசையக் கொட்டுச்

சப்பாணி

குருவருள் பெறும் அருணாசலமகிபா கொட்டுச்

சப்பாணி.

3. குடநடமிடுமுகில் மருமாசுவிண்டோடா

கொக்கெனநிற்போனைக்

குறிவழியமர் பொருமயில் கடவிய செய்குக்கடரட்

டோனைக்

குடதிரைமறிகடல் வரிவளைகடவ கரையில்

குடிபுக்கோனை

குறமக் புலவர்கள் குலமகள்மருவிய

கொற்றவனைப்பாரிற்

குடநிறைசுவைதகு கவிபுகர் புலமைக்கொத்திசை

கற்றோனைக்

குமரனை அனுதினமனமுற நினைவது

குத்தகைபெற்றோனே.

குடமுலை வனிதையர் விழிகவலெழில்

கொடுகொட்டுக சப்பாணி

குருவருள் பெறும் அருணாசலமகியா கொட்டுச்

சப்பாணி.

4. குயிலிசை பழகுபெண் அரசியர்மகிழ்க் கொட்டுக

சப்பாணி

குலமுறை பலவழிதொடர நம்நிம்மதி இயல்பிது

கொட்டுச்சப்பாணி

குயில்நிறவடிவுள் மதலையருடன் எதிர்க்கொட்டுக

சப்பாணி

குடிதழுவிய குடிநிருபர்கள் புகழ்க்கொட்டுக

சப்பாணி

குயில்மயில் திரைதிகழ் புதுவையில் கொட்டுக

சப்பாணி

குருவருள் பெறுமருணாசல மதிபதி கொட்டுக

சப்பாணி

5. தண்டைசதங்கை அலம்ப வெகுண்டு தவிழ்ந்து

வார்த்தெடுத்து மடித்தலை வைத்துத்

தழுவிச்சிறியகுட

பண்டிலுங்கவதன்று துளங்கிய பருவாவது விரப்

பணிமொழி குளறிக்கதறிப் பருகிய பாவமணம்

வீச நறுந்

தாண்டையிளங் கணியவாய் அமுதொழுகத்து
வரிதமொளிதழைய
தூய்மணி மகரக் சூழையணி பணிதற்துலங்கு
புயத்திலகக்
கொண்டைசரிந்து விரிந்து லவத்தினி கொட்டுக
சப்பாணி
குருவருள்பெறும் அருணாசல மதிபதி கொட்டுக
சப்பாண்

# 5. முத்தம்

1. புவியிடத்தெழுவரைக் கணுவின் முத்தணல்
இடைப்பொரிவதால் தனைவேண்டேம்
புகர்முகக்கிம்புரிக் கோட்டு முத்து
உடல்வெதுப்புராதே என்னி(து)
கொள்ளேம்
அவிருமணி வெண்பணிமுத்துச்
சுரவின்முட்டைத்தூதாற் கண்டு
தீண்டேம்
அரும்பிய கரும்பின் முத்து கலசெக்கில்
உடைபடுவதாமென விரும்பிவாங்கேம்
குவியுமிதழவன சமுத்தருகால்
பதிந்துபுரைகொண்டு தென்றது
விரும்பெருங்
குமுறுதிரைவாருதியிலி முத்துப்பு
நீர்க்கொண்டத்து வென்றுமதியெம்.
கவிரிதழ்விரிந்த செங்குமுதவாய் அமுதொழுக
வாயின்முத்தருளே
காவிமலர் மேனி அருணாசலமகீப
நின்கனிவாயின் முத்தமருளே

2. பொற்பிலகு நெடுமடலாம்பை திகழ்முத்துவாட்
பூட்டி வெட்டுப்படுவதாற்
பொண்பதற்கழகுர் தென்றுடன் வரைந்து
நம்வுந்தியாவது சிந்தியெம்
சொற்பழகும் துரிதச் சுவைகனியும் ஆதாரசுந்தரத்
திலத்துகள் தவிர்த்
தொளிரமுத்தம் மேதையுட்பட்டு வெளிதோன்றா
கடைக்கருதிலேம்
பற்பலவகுப்பாகும் இனத்தின்மூத்த நீர்ப்பாவையும்
செற்றிலமுங்கிப்
பாதரவலைக்குட் படாதென்பதால் விருப்பற்ற
தனை இடச்சித்திடுவேம்.
கற்புரப்பரிமளங் கமழ்பவழயிதழ் கனிவாயின்
முத்தமருளே
காவிமலர்மேனி அருணாசலமகீப நின்கனிவாயின்
முத்தமருளே

3. வடிவிடுந்தேனும் ஆசதாளிகத்தும் பாட்டிவழியும்
சாறுநின்மட
வாம்பைக்கனியும் மாங்கனியும் உட்படாவருக்கைப்
பலாக்கனியுமான
பிடிமுலைத்தலை நடுக்கண்வழி சுரந்ததிலப்பிதா
விட்டொழுக்குபாலும்
பேசுதற்கினிய கற்கண்டுமொன்றக் கிருசிபெறு
பஞ்சதாரை விரவிப்
பொடிபடுத்திய குளத்துட்கலந்த முதமாம்புணரியில்
மிகுந்த செஞ்சொல்
புலவோர்களுள் அங்களிப்பவிக் திரமும் பழகமெழ
மனதுவப்பக்
கடிகமழ்மலர்க்குமுத வாயிதழ்சிவப்ப
நின்கனிவாயின் முத்த
மருளே
காவிநிகர்மேனி அருணாசலமகிப நின்கனிவாயின்
முத்த மருளே

4. முத்தவமொய்த்த புகட்பயிர்வைத்த நின்முத்த
மளித்தருளே
மூதுலகால் பரவாதுவான நின் முத்த மளித்தருளே
முத்தர்கள் சித்தர்கள் சித்தமுவக்குநின் முத்த
மளித்தருளே
மோகமினார் பாதரகமடங்க நின்முத்த
மளித்தருளே
முத்தலைவர்க்குள் முதற்பொருள் பற்றுநின்
முத்தமளித்தருளே
முழிகவாகன் அணிரடிபாவு நின்முத்த
மளித்தருளே
முத்தமிழ்கற்றவர் மெய்த்திற்கு நின்முத்த
மளித்தருளே
மோகனவேள் அருணாசலபூப நின்முத்த
மளித்தருளே.

5. முத்தன் சிவிகையும் முத்தின்கவிகையும்

தரக்கண்டருளு

நின்முத்துந்தருக

முதிர்வளமீறிய புதுவையில்வள முகில்நின்முத்தந்

தருகமுத்தமே

முத்தின்கவிகை நிழற்கண்டுலவும் நின்முத்தம்

தருகமுத்தமே

முகமதிசேரொளி திகழ்கனி வாயிதழ்முத்தந் தருக

முத்தமே

முத்தின்சுடிகை துலங்கூந் தலைவனின் முத்தந்

தருகமுத்தமே

முழுமதியும் நிலவிதழ் நிலவுமிழ் முததுந்

தருகமுத்தமே

முத்தின்சுடர்விடுத்து ஒன்றியநகை முத்தந்தருக

முத்தமே

முகிலருணாசலபதி சுவைபெறு முத்தந்தருக

முத்தமே

**முத்தம் முற்றும்**

# 6. வாரானை

1. கனகத்தழுத்திப் பிதக்குலது பச்சைமரகதப்
பணிதரிக்கவருகக்
கனன்பூஷண முத்துமாலை வச்சிரமாலைகண்டிர
மணியவருகத்
தினகரக்கதிரெறிக்குஞ் சுடர்க்கைவளைகள்
சேர்க்கப்பணிந்து வருக
சிற்றடிபொற் பாதசாலம் சிலம்பொலி சிலம்ப
விரைவாகவருக
மனகவனவாம் பரிமடித்தடிபதித்து வருமார்க்க
இதுகண்டுவருக
மாற்கண்ட எங்களருணாசல நராதிபதிவாழ்த்து
பேராளன் வருகப்
பனகமண்டல நடுப்படழிதித்தெறு
கோபாலகிருஷ்ணன்
போனிப்படிப்
புகழ்வந்த அருணாசலநராதி பதிபண்பாக
நீவருகவே

2. ஆர்க்குமருமைப் பிள்ளை வலுவானோர்க்குரிய
பிள்ளையடுத்த
வர்க்குமினியபிள்ளை எளியவர்க்குப்
பெரியபிள்ளை கட்டு
வார்க்குங்குமச் சேறொழுகு தன்மனார்
மோகப்பிள்ளைபெற்று
வளர்த்தெடுத்து மனங்களித்து வருமுவருக்குந்
துரைப்பிள்ளை
பார்க்குந்தருணத் தருணவொளிபடர்ந்த
நீலநிறப்பிள்ளை
ராசருக்குக் கண்மணியொப்பான தருமப்பிள்ளை
புகழ்
சேர்க்கும் புதுவைச்சரவண முத்தின்ற
வரிசைப்பிள்ளை
வச்சிரதேகண் அருணாசலம்பிள்ளை
சிறந்துடைந்து வருகவே.

3. வஞ்சியாஞ்சி நிகர்மங்கையர் விரும்பியுன்பால்பார்க்க
வேண்டிநின்றார்
மறுகியடித்துகிச்சு வர்த்தலம்பற்றி மென்மலரடி
எதிர்தோதுங்கிக்
கொஞ்சிமெல்லன்ன நடையென்னவேதளர்
நடைக்குகொண்டு
வந்தேவராத
குற்றம்யாதென்ன வறிகின்றிலேம்
உள்ளக்குறியின
தெனக்கூறிலாய்
செஞ்சிவடகாசி தென்குமரிமேல்மலையாள
தேசமெங்குங்
கீர்த்தியாய்ச்
சித்திரசிலை வடிவழகுபெற்ற துரைராசன்
சித்தந்தி விரும்பிவருகப்
பஞ்சினுமனிச்ச நன்புவினுஞ்சேர்கமலா
பாவித்திருப்பத் தன்மேற்
நடந்துமகிழ அருணாசலாதிபதி பருவநடை
கொடுவருகவே.

4. மறுமைதொடருமரிய தவமும் வாழுநிறை
யவருகவே
மதனனுருவில் எழுதவரிய வடிவதிகழ் வருகவே.
சிறுமை பெருமையுணரும் அரசர்தினமும்
மகிழ்வருகவே
சிவனை மனதில் நினையும் அறிவுதெளியுநிபுணன்
வருகவே
வெறுமைவிரும்பு முதகவிஞர் மிகவுமுருக
வருகவே
விசையன் அன்பிமன யனினை சொல்விரத
சாதனவருகவே
பொறுமை நிலைமை தலைமை வளமைபுரியுமது
வருகவே
புதுவை நகரினழகு பழகுபுனிதன் வருகவருகவே

5. குணரெற்றின் மானசரவணமுத்து

பூபன்குமாரகம்பிரன்

வருககொற்றவன்

அனந்த பூபதியெனும் கொண்டல்நன்

மருகன்வருகப்

பணமிக்க சேடன்ஒப்பர் ஞானதேசிகன்

பண்புபெறுமருகன் வருகப் பாக்கிய

தாணாமரதிநாதம் வேல் இனியபட்சமா மருகன்

வருகக்

கணமுற்ற செல்லவான் பொத்தி

முத்துப்பிள்ளைக்கனிவு தருமருகன்

வருக

கற்பகக்கன்னா கவளர்வீரவாகு மாற்கண்டன்

மெய்த்துணைவன் வருக

மணமொய்த்த காவிமலர்மாலிகா பரண

மணிமார்பவுந்து துங்கண் வருக

வளமைதிகழ் புதுவையருணாசல நராதிபதிவருக

விரைவுடன் வருகவே

**வாரனை முற்றும்**

# 7. அம்புலி

1. நாலிரண்டெண்ணி இரண்டாங்கலைக் கதிவநீ
நானிலத்தவர் மதிக்கு
நாலெட்டுபடித்த கலைவளர் வளருமிவனோடு
உஞ்சுவேதவண்ணீ
பாலொன்றிரண்டஞ்சு வேதவண்ணீவனித்
தியகுபோனீசொற்
பாக்கியவலவர்
பாடலாற்கற் கீர்த்திசேர் புகழ்பாக்கிய
குபோனிவன்மெய்ச்
சூலமுதிந்தெழு மேகப்படலத்து லாவரு’சுப்பிரப்
பிரகாசனிவனாம்
மாலிருவருஞ்சம்மெனக் குறித்தவனோ ஒடம்பு
யாடவரவே.
யாதாவுகூறும் அருணாசல மகீபனுடனும்
புலியாடவே.

3. மாகித்திலோர் கணபொழுதுதங்காது
பொன்வரைசுற்றியே
சுழல்வதால்
மழுவாளிசெந் தழற்கண்ணிடம் இருப்பதால்மறு
களங்கப்படுதலால்
மோகத்தில்நின் மாமனிட்டசாபத்தினால்
முழுமதிகுறைந்து
உழல்வதால் மூன்றுலகு
மாரிவாளனென்று பெயரிடுதலால் மோது கடலில்
வீழ்வதால்
போகத்திலிருந்து பிரிந்துடலமெலிந்து
ஐம்புயலிடத்துரு
மறைவதால்
உரைப்பிவன் பினாலளவற்ற புகழ்பெற்று
வாழாவிருவ
உகத்துளொரு உயிர்த்துணைவன்
இவனேறுவந்தப்
புலியாடவரவே
யாததவுகூறும் அருணாசலமகீபனுடனம்
புலிபவேண்டி யாடவரவே.

3. தமர் முறு சவராசி குழுதையயவரை

யிதாத்தான்மாய சென்று

திக்குந்தரணி

ஈராறுபெயர்வாதம்மில் ஒருவன்மாதாந்த

மட்டொளியுடைத்தாய்

தமிதினகானெனப் பூமண்டலத்தும்பை

சேதனாசேதனத்தைச்

செந்தழற்

சுடர்விடுத்துப் புறங்காயத்தைத் தீர்ப்பதற்கு

பவித்த

குமரன்மாத்துநிறை குன்றாது தண்ணளி

கொடுத்தருள

விமானமூர்ந்தாய்

கூறுபலகலைதெரிந்து வாயிலாகவிசை

கொண்டுலவு

பெருமைபெற்றாய்

மார்சிறைவிடு முருகனடிபரவும் இவனுடனம்

புலீயாடவாவே

ஆதரவுகூறும் அருணாசலம் கீபனுடனம்

புலீயாடவரவே

4. ஆழிசூழ்புவனத்தில் நால்வளந்திகழ்
புதுவையரதிபதி
இவனென்பதிலாக
மெலியாதிரவுகல் முற்றுநிற்சிந்தை யாயிருந்த
மகிழ்வதால்
ஆழிகுடியகுடமுடி வேந்தர்சபையிலின்
ஆணைனப்பெயர்
பெறுதலால்
சரித்தவர் மெலிந்தவர் குறைதவிர்த்த
வர்க்கமுதல் இத்தருள்
வதாலப்பேர்
ஆழியர்விரவிதோன்றாத படிபகலை
இராவக்கியநம்மாயன்
மருகன்னபர்
வானந்த வெள்ளித்தில்முழ்கி மனமலையாத
மேன்மைபெறுவர்
வாழிவானுலகுவிடிவன் மகிமைகண்டு கண்டம்
புலியாடவரவே யாதாவு
கூறும் அருணாசலம் பேறுடனம் புலீயாடவரவே.

5. வெவ்விரவுகுப்பகை தொலைப்பகடற்
குழியில்விழாது
கலைநிரப்ப
வேதண்டபீட நடுவுச்சிமேற் பொலிவுபொறுவீருண்
குண்டாகபான்
செவ்விராவும்யகலும் கலாதுதட்பெருச்
சிதறிவிடடெறியாது
வெண்டிங்களொளி
மறையாது தண்ணளிகுறைந்து மேயதயவுருத
மிர்தவடிவை
கவ்விராகத்தி வேஷத்தில் முயல்பருகாது
க ரு ணை வா ரு தி ய ளி த்
துக்காதிகை
விரும்புமொரு சொற்கபோகத்தை யெக்காலமு
நினக்குதவுவான்
அவ்விராகவன் மருகனடிபாரவும் இவனுடனம்
புலியாடவாவே
ஆதரவுகூறும் அருணாசல மகீபனுடம்
புலீயாடவரவே.

6. வஞ்சமொன்றின்றி உரைசெய்யுமொழி
கனவினிலுமாருத்
தொய்யோகன் வாசன்
விரும்பும் மகாராசனாந்திருவழு
திவளநாட்டிவ்வாழ்வு
பெற்றோன்
தஞ்சநீயென்பவர் களுமருணாசல தாரவிதரனுக்கு
தண்டிகைக்
துரைபிச்சை ஆண்டிவன் பேசவும் தண்டப்
பிரசண்டனுக்கும்
கஞ்சமுகாஞ்சதன் கோபாகிஷ்ணன்
அங்கன்னனுக்கும்
பான்முக
கண்ணனருள் மீறுசாபன முத்தும்குபனிரு
கண்மணி யெனச்
சிறந்தோ
அஞ்சலென்றி இரவல்லர்கொடுங் கலிதுரத்தவன்
ஓடம்புலியாடவாவே
யாதவாகூறும் அருணாசல மகிபனுடனம்
புலியாடவரவே.

**அம்புலி முற்றும்**

# 8. சிற்றில்

1. கங்கையமுனை சரசுபதி கமலந்திகழ்
   கோதாவிரிசங்காற்றுந்
திரைப்பாலாறு பென்னை கனகாவிரி
   வெள்வளைகமுறுந்
துங்கபத்திரி வைகையலை சுருட்டும்
   வேகவதியிவைந்
துணையாய்ச்சிறந்த பொருளைந் தத்துடர்பாகிய
   தென்கரைப்புறத்து
தங்கமயமாபு முறங்கொடுபோய்த் தாமக்குழலார்
   சிலகுயர்கள்
தவளநிலவு போல்பரந்து தயங்கும்
   புளினத்திரளில்மலர்
செங்கைவருந்தக் கொணர்ந்த மணவச்சொத்த
   சிற்றில்சிதையிலே
திருமால் அருணாசலமகீபா சிறியெஞ்சிற்றில்
   சிதையிலே

2. செம்பொற்ற கைலாப்பல பலவாய்ச்செய்யும்
தூதைசில வருத்திருத்
திப்பதித்த கடபட்டுப்பிற்றெ ஒளிந்தபுனலாறு
ஐயேற்றிப்
பைம்பொற்சிறு முத்தரிசிபெய்து பரந்து புகையாக்
கன்று
படிப்பாகப்படு நற்பதம்பார்த்துப் பரிவாய்ச்சரித்து
வடித்திறக்கும்
கும்பத்தினங்கு தாழிநடுக்கொதிக்கும் புதிய
புளிங்கறியுங்
குளிர்ந்த மலரிற்றுவயலும்பர் கூறுங்கருணைப்
பொறித்தரியும்
அப்பொற்காலத்து நினக்குவிருநகன் சிற்றில்
சிதையெலே
சிலபூபாலா யாமமைத்த சிற்றில் சிதையெலே.

3. வடக்குங்மச்சந்தனக் களவாசத்திறு மாந்தண்ணாந்
துவர்க்குளங்

மங்கர புரித்து மணிசேர் செம்பொற் பணி செய்யிக

கடக்குஞ்சாக்கிம் புரி மறுங்கறுப் புறையாது
யென்றே

கனத்துத்தடித்த புளகமுலைக் கண்கள்தறுத்துப்
பளபளத்துத்

தடக்குன்றி இரண்டாமெனக் பணைத்த
தனத்தாச்சியாகச்

சியாபாலுந்தியம்புது வெண்ணையும்
ஒ ன் று ய் த் த ப டி க் கு
கொடியுண்டுபசி

யடக்குங் கருணாகரயுல் போலடியேஞ்சிற்றில்
சிதையேலே

அருணாசால பூபாலயாமமைத்த சிற்றில்
சிதையேலே

4. தூற்றும்பேதைப் பருவமுற்றி தொடர்ந்து
பேதையினம் பருவத்து
நீராட்டி--------------
-------------------
செழும் பொற்பணிவு நவமணிவச்சிரத்தாவடமும்
பூப்படியன்னை
போற்றிப்பசி தீர்ந்துக்கழங்குபோற் பாசியம்மனைப்
புதுப்பந்தடித்து
நன்பகலிற்புறத்துச் சிறுவீடெனப்ப அரும்புகலும்
வண்டலிழைந்து அடிகல்
ஆற்றுந்தருணத்து உட்புகுந்தடியேஞ் சிற்றில்
சிதையேலே
அருணாசல பூபாலாயாமமைச் சிற்றில் சிதையேலே

5. நாளாலுருளப் பொற்சகடுதைத்துத் தனிகட்செவிப்
பொற்படமிதித்துச்
சாபக்கருங்கல கலிகையைத் தருதற்கிசைந்த
துகளெழுப்பி
வாளாற் செகுயவுரத்த கஞ்சணன்மார்பில்
புடைத்துசெழும்
பவளவரை மீதிருந்துசிலை குனித்து
வ ண் டை த் து ர ந் தோ
மருக்கணெனும்
வேளாறிரண்டு காதலத்தான் வேலசுரர்
பதியனைத்து
வெருக்கிய காரணங்கேட்டு மன்னாரிளைத்த
சிறுவீட்டை
யாளாதளித்தல் நின் முறைமையாமே சிற்றில்
சிதையேலே
அருணாசல பூபாலாயாமைத்தருளே சிற்றில்
சிதையேலே

6. நின்னைப்பாவாக் குறும்பாற்நெறியிற் பிழைத்தாக
காதன்னிலையிற்
பிறழ்தவற்றினர் நேசத்தொடர்பில் நன்றி குன்றிக்
தன்னைப்புகழும் முழுமையடைய ------------
---------------------------------
தன்னைத்திணை சாலப்பனேயடியேஞ் சிற்றில்
சிதையேலே
அருணாசல பூபாலா யாமமைத்த சிற்றில்
சிதையேலே

7. குடிவைத்தவர்க்கு மாழிகைமுற்கூடஞ்
சதுக்கநெருங்க வைத்துக்
கூபந்தடங்கள் வேட்டிவித்துக குளமும்புரவுந்
திருத்துதிவைத்து
துடிவைத்தகோரன் வலைத்துத் தூவும்பலவித்
அனைத்தும்
வைத்துச் சுங்கழும் பசுகன்று பரிவைத்துப்
படிவைத்தளந்து கொடுத்துவைத்து பனஞ்செய்து
அகமகிழ
பாரிற்புகழ் சேர்கொங்கை குலபதியே
புதுவைபதிக்கரசே
முடிவைத்திருந்த முவேந்தர்முன் வைத்திருந்த
பெருங்குடிக்கு
முதன்மைக் குடியாய்நிலைமை பெற்றமுகிறத்
துயர்ந்தலைவா

**சிற்றில் முற்றும்.**

# 9. சிறுபறை

1. வானதத்தெழுசத்த மேகமுழுக்க
நெடுவாருதித்திரைமுழங்க
வாலம்திசூடி
சிறுகைத்துடிமுடிக்க வெதிர்வந்துவந்திடி
முழுக்கத்தாணமக்க
கேசமோரெட்டும்
பீரிட்டளவு
தானிலாக்குரல் முழுக்கத்தாணிமன்னவர்கள்
மனுநீதி
நெறிபிரழாது சந்தம்பறை முழுக்கக்காண
வித்தியாதரரிசைக்
தொனிமுழக்கவன கண்மைவொவியா கடத்தெக்
காலமும்
நெய்தலம பறைமுழுக்கச் சிலைக்காமனம்
பொலிமுழக்கக்
தேனகத்தூற்றொழுகு வளைப்புயாசலர் சிறுபறை
முழக்கியருளே

2. தென்பொதியமால் வெண்டரளார சித்ரை

சிந்திவருபொருனைந்தியுஞ்

செல்வநிறைபாண்டி வளநாடுமுன்றில்

வாய்ப்தியமும் முரசொலியு

பொன்பொதிய வீழ்க்குற்று நீலமாலினையும்

வாம்புரவியுமதக்

தவாரணமும் புயலேட்டு மழி கேதனமு நடு ----

----------

நோன்புதருசந்தில் வடிவேலாகும்

ரேசாதாளானையும்

பெறுநிபுணனே

அழகுதிகழ்மதனனே மதிவதன சுமுகனே

அனவரத கலியாணனே

பின்பு

முன்பார்த்து வருசிங்கமே வல்லோசைபெறுபறை

முழக்கியருளே

பேசுபுகழ்மீறும் அருணாசல நரேந்திரவொலி

பொறுப்பறை

முழக்கியருளே

3. மான்பானெங்கள் சரவணமுத்து

பூபதிகனமணியென்ன

வந்துதித்தாய்

மற்புயனைந்த கிருஷ்ணவேளினியவ சனமுத்தின்

பெருமாள்மி

கான்சீர்பெறுமிவர்களைச் சிறியதந்தையென்றன்பு

வைத்துளமகிழ்ந்தாய்

ஆதிநாதன்

பின்வளராதி நாதன் கலை வலாளன்மாத்

தாண்டமால்சொற்

பாலைந்திகழ் பரமசிவனிவர்

நன்மைத்துன்பமாக்கிய

மிகுந்துயர்ந்தாய்

பதுமமலர்மங்கையருள் நிரவதிகமான

தன்பதியிலன்னச்

சிறந்தாய்

தேனருவிசொரி குவளை மாலிகாபாண

விச்சிறுபறை

முழக்கியருளே

தென்புதுவைவாழும் அருணாசல

மகீபனேசிறுபறை

முழக்கியருளே.

4. வேததவபோதனர் சிறுவதித்துளம்

விருமபியொருபெயாரு

பாலிருப்ப வித்துவ

செனமொத்துன் மேல்விருதுபாடித் தவசில்வீற்றினி

திருப்பதொருபால்

நீயென்றஞ்சி யெஞ்சிநிரை நிரையாயிருப்ப

தொருபால்

மாதர்களுநிற்ப தொருபாலவருவிருக்தினிய

சுற்றத்தவர்கள்

நின்னருமை வசனத்திருப்ப தொருபாலாதலால்

மணிமுன்றில் வெளிவந்து

மனது கந்தணிபறை முழக்கியருளே

யாராவமகவாத

அருணாசல மகீபனே இனிபறை முழக்கியருளே.

5. சற்குணசலாபன் அருணாசமகீபனஞ்சாத
சரவணமுத்துமால்
தண்டமிழ்க்
கருள்வீரவாகு சேரைப்பதி உளத்து நெஞ்ச
பெருமாள்
நற்குலம்விளங்குமிவர் மெய்த்துணைவனே
சாசநயலெளித முகமதனே
நாவலவரின்னிசைப் பாமுறைமையிற்
பாடுநற்தவியும்
இனிதுகேட்டு
சொற்குணமறிந்து விலைபெற்றபட்டாடை
எடுதுப்படிபாகை
செம்பொற்
சுடர்மணிப்பணி கனகமுதலான பரிசெலாந்தொற்ற
மாகந் கொடுக்கும்
அற்புதக்கருணா கடாட்ச முதல்வள்ளலே
அணிபறை முழக்கியருளே
யார்வமகலாத அருணாசல மகீபனேயணிபறை
முடிக்கியருளே

# 10.சிறுதேர்

சூலாமைப்பால்முது குறைப்பத்துலங்கும் படநாகப்
பிடரிந்றோன்று
மாலத்தலைவன் முடிதுளக்கிச்சு மக்கும்படிப்
பரப்பின்
மேலாங்கனகவரைப் புறத்துமீனத்து
வசத்தொளிவீச
வெயிலைப்
பரப்புஞ்சுடர்ப் பருதிவிசும் பூடுருவித் தேர்துரப்பக்
காலாமொற்றைத் திகரியியங்காதே யிடறக்காலே
தீர்ந்துக்
கலக்கப்பதுங் குங்கதிரைமதி கண்டு மகிழும்
இன்னாலனு கூலா
கோலாகலமதனே கொடுஞ்சித் தடந்தேருருட்டுவே
கோவே
அருணாசலவே கொஞ்சித் தடந்தேருட்டுவே
கோவே.

2. அடுக்குமணிப்பார்க்குள் வயில்தாலச்சிருத்திக்
கடைத்தலைப்
பொன்னாழி
பொருத்தி மாகத்தாலடங் காப்பரப்பு நிலமைத்து
தொடுக்கும் பவளக்கால்நிறுவிச்
சுற்றஞ்சுருவாணியைக்
கொழுவிச்சுடர்
மாணிக்கப் பலகைத்துச சோதிதிகழ நீலத்தால்
எடுக்குந்தனித் தட்டொருமூன்று
மியற்றிச்சிங்காசனக்குறடு
மிலங்கப்பதித்துப்
பூரித்தோம் எவர்க்குந்த தருமணமறிந்து
செம்போன்
கொக்குந்தடத் தாமரைக்காத்தாற் கொடிஞ்சி
தடந்தேருட்டுகவே
கோவேயருணாசல மாலே. கொடிஞ்சித்தடந்
தேருருட்டுகவே

3. தேறுந்தமிழ்ப் பாண்டியரைச் செலுத்தும்வழு
திவளநாட்டின் சிறந்த
குமரித்துறை யீருமச்செழித்த புவனத்தவர்கள்
பெறும்
பேறுண்பண்பள அல்லது உழுவோர்
பெருமைத்தாக்
கோர்வையினாற்
பெருகப்பலன் முப்பூவும் வரப்றெற்ற
குபேரபாக்கியத்தால்
லேறுஞ்சிவிகைகவிகை படைத்திறுமாந்திருப்ப
தொத்தன்னிறையையாறு
கூறுபடுத்ததில் லொன்றவன் கைக்கொள்ள
நின்றவைந்தி
கூறுந்தரக் கைக்கொண்டவன் கொடுஞ்சித்தடந்
தெருட்டுகவே
அருணாசல கிபாகொடிஞ் சித்தடந்தே ருட்டுகவே

4. மதிக்கும்பிரமகற்ப முற்றுவரைக்குந்தி

காந்தவரைக்குமொழி

மாருப்பிச்சையாண்டியென்னும்

வணிகேசனுக்குங் குலசைநகர்வாழ கோபால

கிருஷ்ணனுக்கும்

துதிக்குங்கவி மாரியைப்பொழியுஞ்

சொற்பாவலர்க்குக்

கருணைமழை

சொரிந்த அருணாசலராச துங்கவகளங்

கனுக்குமன்பு

பதிக்கும்பொப்பிள்ளை யென்னப்பரி வாயழைக்கும்

பெயர்படைத்தாய்

பாவைத்தருவைத் திரைக்குளஞ்சிப் பகட்டுவாளை

துள்ளிவிண்ணி

குதிக்கும்புதுவைப் பதிக்காசே கொடிஞ்சிறு

தேருருட்டுகவே

குலவான அருணாசல மகீபாகொடிஞ்சி

தடந்தெருட்டுகவே

5. சூடாமணியே யிருநிதியேசுரபிதருஞ் சிந்தாமணியே
சுற்றத்தவர்
சூழ்கற்பகமே சோதித்தரள மணி விளக்கே
வாடாததேவதாரப் பூமலரே அலர்ந்த
செழுங்காவிமாலைக்
கிசைந்த மணிமார்பா மாமால்மருகன் குமாரன்றித்
தேடாமனக் குஞ்சாகன்றே சீறாதுவந்து சிங்கேறே
தேனாறுடைக்கக் கரும்பிருந்தின்னிசை
பாடியசெங் கமலமுகம்
கோடாதேவர்க்கு மருள்புதுவைக் கோமானே
தேருருட்டுககே
திலவானருசல மகிபாகொடிஞ் சிச்சிறு
தேருருட்டுகவே

6. பார்வாழி திருவாழுதிவளநாடு வாழிசுடர்பழகு
முடிவேந்தர்வாழி
பதுமாசனத்திருமடத்தை வாழ்புதுவை யம்பதிவாழி
கீர்த்தி பெற்ற
பேர்வாழியெங்கள் சரவணமுத்து
ராசபிரமமதராசன்
பிள்ளைத்தமிழ்
பாடலகை கொண்டு பரிசருளவியேக்
குணசாலிவாழி
நேர்வாழிபூண்டவ அருணாசலரேந்திரனன்
இனறிவாழி
யுடையவங்கிஷ
நீடுழிவாழியாமுப்பத் திரண்டற முதிலைநிற்க
வென்றுவாழி
சீர்வாழியாக மனிதயாமைறவாநீ சிறுதேரு
ருடியருளே
செல்வாக்கு பொன்னருணாசல பகீபனேசிறு
தேருருடியருளே.

**சிறுதேர் முற்றும்**

# முடிவுரை

புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழில் முருகனைப் பற்றிய அறிய வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

"முத்தின் சுடர்விடுத்து ரன்றியநகை முத்தந்தருக முத்தமே

முகிலிருணாசலபதி சுவைபெறு முத்தந்தருகமுத்தமே"

என்று குறிப்பிடப்படுவதன் வழி இதனை நன்கு அறியலாம்.

பிள்ளைத்தமிழின் வளர்ச்சியில் புதுவை அருணாசலம் பிள்ளைத் தமிழின் பாட்டும் இடம்பெற்றிருப்பதை மறுப்பதற்கில்லை.

# துணைநூற் பட்டியல்

தமிழ் இலக்கிய வரலாறு – தமிழண்ணல் மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999